மக்கள் குரல் 30-10-2021

# ஸ்ரீ ராமச்சந்திரா ஆய்வுத்துறை தலைவர் கல்பனா பாலகிருஷ்ணனுக்கு சாதனை மகளிர் ஆய்வாளர் விருது

சென்னை, அக்.30–

கிளாரிவேட் என்ற உலக தனியார் ஆராய்ச்சி நிறுவனம், ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வுத்துறை தலைவர் டாக்டர். கல்பனா பாலகிருஷ்ணனுக்கு மகளிர் ஆய்வாளர் விருது வழங்கியுள்ளது.

இந்த ஆண்டு, இந்தியாவில் எட்டு ஆய்வாளர்களுக்கும், 12 நிறுவனங்களுக்கும் மிக சிறப்பான மற்றும் புதிய ஆய்வு படைப்புகளுக்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. வெப் ஆஃப் சைன்ஸ் சைட்டேஷன் இண்டெக்ஸ் மற்றும் இன்சைட்ஸ் எனப்படும் ஆய்வுத் திறன் மதிப்பீடு அமைப்பின் ஆழ்ந்த மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. அதிகமாக பின்பற்றப்பட்ட ஆய்வு கட்டுரைகள் இந்த மதிப்பீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன என்று கிளாரிவேட் நிறுவனம் தெரிவித்தது.

கிளாரிவேட்டின் இந்த விருது, ஸ்ரீ ராமச்சந்திராவின் ஆய்வு முயற்சிகளுக்கும், அதன் இந்திய மற்றும் வெளிநாட்டு கூட்டாளிகளுக்கும், பொது சுகாதாரம் போற்றுபவர்களுக்கும் தகவல்களை உயர் மதிப்பீட்டு பிரசுரங்களில் வெளியிட கடுமையாக உழைக்கும், குறிப்பாக மகளிர் உள்ளிட்ட ஆய்வாளர்களின் தரத்தை மேம்படுத்த உதவும் என்று டாக்டர். கல்பனா பாலகிருஷ்ணன் கூறினார்.